# புதிய காலைக்கதிர்

காலை 01 | மார்கழி -2013 | கதிர் 03





காலையடி மறுமலர்ச்சி மன்ற மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும்

கல்வி - கலை - இலக்கிய

இதழ்

காலையடி மறுமலர்ச்சி மன்ற
மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும்

# புதிய காலைக்கதிர்

காலை 01 மார்கழி -2013 கதிர் 03

ஆசிரியர் : ஆ. கஜானி

படைப்பாளிகள் :

தி. திலீனா
ஆ. கஜானி
சி. விதுர்சா
ம. தகானா
தி. கஜேந்தினி
ஜெ. ஜனனி
பா பிரியங்கா
Y. Mathanky
S. Pirunthajiny
ச. சரணியா
த. டிலக்சனா
வி. கார்த்திகா
ஆ. கஜந்தன்
ச. கிரிசா
பா லஜந்தன்
கே. கஸ்மியா
பா தக்சிகன்
தி. தினாத்

வடிவமைப்பு : தனூட்

முன் அட்டை ஓவியங்கள் :

தி.மித்திரன்
சி. சக்திவேல்

பின் அட்டை ஓவியங்கள் : யோகதாஸ்

பின் உள் அட்டை ஓவியங்கள் :

ப. பிரபஞ்சன்

உள் பக்க ஓவியங்கள் :

ந. தாட்சாயினி
ச. கதுர்சனா
ஜெ. யதுர்சனா
யோ. நிலாவினி
ந. திலக்ஷன்
அ. துஸ்மிகன்

வெளியீடு : மாணவர் மன்றம்,
காலையடி மறுமலர்ச்சி மன்றம்,
காலையடி, பண்டத்தரிப்பு,
யாழ்ப்பாணம், இலங்கை.

விலை : ரூபா 20/-

## மகிழ்வுடன் மாணவச் சகோதரர்கட்கு !

எமது கிராமத்தின் மாணவர்களின் கருத்துக்களையும், பிரச்சனைகளையும் ஆக்கங்களாகச் சுமந்து வருகின்ற புதிய காலைக்கதிரின் மூன்றாவது இதழ் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றோம். ஒலி பெருக்கியின் அளவுக்கதிகமான பாவனை, கல்வி இடைவிலகல், சிறுவர் துஸ்பிரயோகம், போதைப் பொருள்களின் பாவனை என்பவற்றுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய இன்றைய எமது கிராமச் சூழலில், அவற்றைப் பற்றியே அதிகமான மாணவர்கள் ஆக்கங்களை படைத்திருப்பது பாராட்டுக்குரியது.

இப் புதிய காலைக்கதிர் இதழானது எவ்வித கால வரையறைகளுக்கும், தரக் கட்டுப்பாடுகளுக்கும் உட்படாமல் எமது மாணவர்களின் சுயமான ஆக்கங்களையும், பயனுள்ள தொகுப்புக்களையும் உள்ளடக்கியதாக கல்வி கற்றுக்கொண்டிருக்கின்ற மாணவர்களாகிய எமக்கு வசதியான பொழுதுகளில் வெளியிடப்பட்டு வருகின்றது. வெகு விரைவில் இவ்விதழைக் காலாண்டு இதழாக வெளியிடுவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றது. எனவே, மாணவர்கள் அனைவரும் ஆக்கங்களையும், இந்நூல் பற்றிய விமர்சனங்களையும் எழுதி, முடிந்தவரை விரைவாக மறுமலர்ச்சி மன்ற நூலகத்தில் உள்ள தகவல் பெட்டியில் இடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். எமது கிராமத்தவர்கள் அல்லாத அயற்கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களினதும், குறிப்பாகப் புலம் பெயர் தேசங்களில் வாழும் மாணவர்களினதும் ஆக்கங்களை ஆவலோடு எதிர்பார்த்து நிற்கின்றோம்.

# சிறுவர் துஸ்பிரயோகம்!

செல்வி தி. திலீனா
க.பொ.த உயர்தரம்

சின்னக் கண்சிமிட்டி மழலை பேசும்போது
சில்லென சிலிர்க்காத மனசில்லை
கள்ளங்கபடமற்ற சிந்தனைமூலம்
சிகரத்தைத் தொடமுயலும் சிறுவர்நாம்



பட்டாம்பூச்சியாய்ப் பறந்து
பள்ளிசெல்லும் வழிதனிலே
பாவிகளின் காமவெறியால்
பாதைமாறும் எம்வாழ்வு

புத்தகத்தைப் படிக்கவிடாமல் - தீயவர்
புகைத்தலை எமக்கு கவர்ச்சியாக்கி
புத்தகப் பைகளைச் சுமக்கவிடாது அச்சுறுத்தி எம்மை
புண்ணாக்கு மூட்டைகளைச் சுமக்கும் நிலைக்காளாக்குகிறார்கள்

பிஞ்சுக் கைவிரல்கள் பேனாவைத் தொடவிடாது
பாத்திரத்தைத் துலக்கும் பணியைத் தொடர
எமக்கெதிரான துஸ்பிரயோகங்கள்
எம்நாட்டில் ஏராளம்.



சட்டங்கள் பல வந்தும் இன்று
வேலியே பயிரை மேயுமளவிற்கு
பாதுகாப்புக் கொடுக்கவேண்டியவர்களே
பாலியல் வன்முறைகள் செய்கின்றார்கள்

பாசம் பொழியவேண்டிய தந்தை
வழிகாட்டியாய் இருக்கவேண்டிய தமயன்
பாதுகாவலாகவேண்டிய சமுதாயம்
தம்நிலை மாறித் தடம்புரண்டதேனோ?



எமக்கான உலகைப் படைக்க நாம்
உரிமைக் குரலை உரத்து ஒலிப்போம்
துஸ்பிரயோகச் சிந்தனையாளரைத்
துவம்சம் செய்யக் குரலை கொடுப்போம்

காமுகர் தம்மைக் காவல்துறையிடம்
கையும் மெய்யுமாக காட்டிக் கொடுப்போம்
இனிமையான எம்வாழ்வு இருளில் மூழ்காது
ஒளிமயமாக நிலைக்கச் செய்வோம்.

சிறுவர் எம் உரிமைகளைத் தெரிந்துகொண்டு
சிறப்பான வாழ்வைச் சிரிப்புடன் வாழ்வோம்
அனைவரும் ஒன்றுபட்டுச் சிறுவர் துஸ்பிரயோகத்தை
ஆவேசத்துடன் இல்லாதொழிப்போம்

★★★★★

## மரபுத்தொடர்கள்

செல்வி ச. கிரிசா
தரம் - 8

- கண்திறத்தல் - அறிவு உண்டாதல்
- அடியிடுதல் - ஆரம்பித்தல்
- கண்மூடுதல் - இறத்தல்
- அடியொற்றுதல் - பின்பற்றுதல்
- முகம் முறித்தல் - மனம் நோகச் செய்தல்
- கை கழுவுதல் - முற்றாய் விலக்குதல்
- காது குத்துதல் - ஏமாற்றுதல்
- கழுத்தறுத்தல் - நம்பவைத்து ஏமாற்றுதல்
- வாலாட்டுதல் - சேட்டை பண்ணுதல்

★★★★★

## விடுகதைகள்

1. இந்த ஊரிலே அடிப்பவன் அடுத்த ஊரிலே போய்ச் சொல்லுவான் அது என்ன?
2. சிங்கார மடத்திலே சங்கீதக் கச்சேரி அங்கே போனால் அடியும் உதையும் தப்பேலாது அது என்ன?
3. ஊருக்கு நாட்டாமை சாப்பிட்ட இலையை விடமாட்டான் அவன் யார்?
4. இடி இடிக்கும் மின்னல் மின்னும் ஆனால் மழை பெய்யாது அது என்ன?

விடைகள்

1.தந்தி 2.செருப்பு 3.நாய் 4.பட்டாசு

# மானிட இனத்தை அழிக்கும் எய்ட்ஸ்


தொகுப்பு கஜானி ஆறுமுகசாமி. க.பொ.த உயர் தரம்

AIDS, HIV என்ற வார்த்தைகள் மக்களுக்குப் புதியவையல்ல. எய்ட்ஸ் ஒரு ஆட்கொல்லி நோய். விரைவாகப் பரவிவருகின்ற இந்நோய் பற்றிய அறிவு இல்லை என்றால் நாமும் அதற்குப் பலியாகிவிடுவோம் என்பதில் மாற்றுச்சிந்தனையில்லை.

மாறாக எய்ட்ஸ் என்ற வார்த்தையைக் கேட்டாலே "பயம்", "தொட்டாலே பரவிவிடும்" என்ற தவறான எண்ணம், "அயல்நாட்டு வியாதி" என அடுத்தவர்மீது பழியைச் பழியைச் சுமத்தும் போக்கு, எய்ட்ஸ் பற்றிப் பேசுவதே தவறு என்ற குறுகிய மனப்பாண்மை, எயிட்ஸ் நோயாளர் களை தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைத்தல் போன்ற மனநிலை மக்களிடையே எய்ட்சை விடவும் பயங்கரமானதாகப் பரவிவருகின்றது.

உலகிற்குச் சவாலாக இருக் கும் இரு பெரும் பிரச்சினை களாக சுற்றுச் சூழல் சீரழிவு, எய்ட்ஸ் நோய் போன்றன காணப்படுகின்றன. இவை யாவும் இயற்கைக்கு எதிராக மனிதர்கள் செயற்படுவதால் உருவாகி றது. மானிட இனத்தைக் காலனிடம் அழைத்துச் செல்லும் இந்நோயை அறவே ஒளிக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு டிசெம்பர் 01 ஆம் திகதி உலக எய்ட்ஸ் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் 1981 ஆம் அறியப் பட்டபோதிலும் அதை உண்டாக்கும் வைரஸ் கிருமி HIV என 1984 ஆம்




ஆண்டே கண்டறியப்பட்டது. HIV என்பது Human Immunedeficiency Virus என்ற சொல்லின் முதலெழுத்து க்களின் சுருக்க வடிவமாகும்.

குரங்கிலிருந்து மனிதனுக்கு HIV கிருமி தொற்றியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. AIDS என்ற சொல் Acquired Immuno Deficiency Syndrome என்ற ஆங்கிலச் சொல் லின் முதலெழுத்துக்களின் இணைப் பாகும். இதனைத் தமிழில் "தேடிப் பெற்ற நீர்ப்பீடக் குறைபாட்டு நோய்த் தொகுதி" எனக் குறிப்பிடுவர்.

HIV கிருமியானது மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைத் தாக்கி அழிக்கிறது. கிருமிகளுக்கு எதிராகப் போராடும் சக்தியை இழப்ப தாலே பல்வேறு தொற்று நோய்களு க்கு ஆளாவது மாத்திரமன்றி, எய்ட்ஸ் நோயாளி சிறிய நோய் ஏற்பட்டாலே நிச்சயமாக இறக்கவேண்டி நேரிடு கின்றது.

எய்ட்ஸ் ஒரு பாலியல் சார் நோயாகும். பெரும்பாலும் உடலுறவின்போதும், இரத்தப் பரிமாற்றத்தினாலும் இந்நோய் பரவுகின்றது. தகாத உடலுறவின்மூலம் ஏற்படும் எய்ட்ஸ் ஐத் தடுக்க நம்பிக்கையான உறவை, ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வாழவேண்டும்.

எய்ட்ஸ் நோயாளியின் இரத்தம் இன்னொருவருக்கு ஏற்றப்பட்டால் அவருக்கும் HIV தொற்றும். இதனைத் தடுக்க இரத்தம் கொடுப்பவருக்கு எய்ட்ஸ் இல்லை என்பதைப் பரிசோதித்து உறுதிப்படுத்துவதுடன், நம்பிக்கைக்குரிய உறவினர்களிடமிருந்தும், தெரிந்தவர்களிடமிருந்தும் இரத்தத்தைப் பெறுவதுடன், கிருமி நீக்கம் செய்து கருவிகளை உபயோகிக்கும் நம்பிக்கையான பொறுப்பு வாய்ந்த மருத்துவ நிலையங்களில் மாத்திரமே சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவற்றால் நோய் உருவாவதைத் தடுக்கலாம்.

எய்ட்ஸ் நோயாளி கர்ப்ப முற்றால் பிறக்கப்போகும் குழந்தைக்கும் இந்நோய் தொற்றும். எனவேதான் ஒரு எய்ட்ஸ் நோயாளி எனக் கண்டுபிடிக்கப்பட்ட பெண் கர்ப்பமுறுவதைக் கவிர்க்கவேண்டும்.





இந்நோயின் முக்கிய அறிகுறிகளாக திடீர் எடை குறைவு, நீண்டகால வயிற்றோட்டம், தொடர் இருமல், பல இடங்களில் தோன்றி மறையாது இருக்கும் நெறி, மறதி, சொறி என்பன ஏற்படும்.

விசேட இரத்தப் பரிசோதனை மூலம் இந்நோய்த் தொற்றைக் கண்டுபிடிக்கமுடியும். எய்ட்ஸ் ஏனைய நோய்களைப் போன்று எளிதில் பரவக்கூடிய நோய் அல்ல. இது காற்று, நீர், உணவால் பரவாது. நோயுற்றவரின் அருகில் அமர்ந்து தொட்டுப் பழகலாம். அவரது ஆடையை அணியலாம். அவர் சமைத்த உணவை உண்ணலாம். அவரது உணவுப் பாத்திரங்களைப் பயன்படுத்தலாம். அவரைத் தொடலாம். முத்தமிடலாம்.

எயிட்ஸ் நோயாளிகளை வேண்டத்தகாதவர்கள் என வெறுத்தொதுக்காது. அவர்களுக்கு சிறந்த வாழ்வை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். எதிர்கால சந்ததியினர் எய்ட்ஸ் அற்ற உலகில் மகிழ்வாக வாழ வழிசமைத்திடுவோம். ★★★

# அன்னை

செல்வி ஜெ.ஜனனி



இரத்த முத்துக்களை
மதுரம்போல் இருக்கும்
பாலாகத் தந்தவளே அன்னை!

காணாத கனவுகளையும்
நனவாக்கியவள்
உன் அன்புக்கீடு - இவ்
உலகத்தில் இல்லையம்மா!

கூவும் குயிலின் இனிமையை
இந்த உலகம் அறியும்
உந்தன் அன்பின் பெருமை
எனக்குத் தெரியும்.

உன் அன்புதான் உயர்வு
என்றும் பூப்போன்ற என்நெஞ்சில்
பட்டாம்பூச்சியாய் இருப்பாயம்மா!




உலகமெனும் பூப்பந்தில் என்
உயிரிருக்கும் காலம்வரை
என் கண்ணில் நீயும்
உன்நெஞ்சில் நானும்
உறைந்திருக்க ஆசையம்மா!

★★★

# SIGIRIYA

Miss Y. Mathanky
Grade 6



Sigiriya is a rock. King Kasyapa, the creator of sigiriya was a king with an artistic soul. He modelled his place and the city on the mythical abode of 'Kuvera', the god of wealth. Kasyapa gave form to his dreams in building this citadel. The name Sigiriya has many explanations. The most popular, translates 'giriya' as throat, as it is through the throat of a crouching lion that one passes on one's way to summit. Even today, after fifteen centuries of exposure to sun, wind and rain one can see one's reflection on it. So it is named the 'mirror wall' on the polished surface are the sigiriya Graffiti, writings of visitors to the rock. here is evidence that there was 500 portraits of the maidens but only 19 remain today. ★★★

## சுகாதார பழக்கவழக்கங்கள் சில

ச.கிரிசா

- சாப்பிட முன்பும் சாப்பிட்ட பின்பும் கைகளை நன்றாகக் கழுவுதல் வேண்டும்.
- மலசல கூடத்திற்குச் செல்லும்போதும், வெளியே செல்லும்போதும் பாதணி அணிந்து செல்ல வேண்டும்.
- பழங்களைக் கழுவிச் சாப்பிட வேண்டும்.
- உணவு சமைப்பவர் சுத்தமாகவும், தலையை முடி உணவில் விழுந்துவிடாமல் அதற்குரிய ஆடைகளை அணிந்துகொள்ள வேண்டும்.
- உணவுகளை ஈ மொய்க்கவிடாது பாதுகாப்பாக வைத்தல் வேண்டும்.



★★★

# உலகிலேயே உயர்வானது!

**செல்வி பா பிரியங்கா, க.பொ.த. உயர் தரம்**

மனிதராகப் பிறந்தவர் ஒவ்வொருவரும் ஒழுக்கம் நிறைந்த கல்வியைப் பெறவேண்டும். பண்பு நிறைந்த கல்வியே உயர்ந்தது. பிழையற்ற கல்வியைச் சந்தேகங்கள் இல்லாதவகையில் கற்று அதன்படி வாழவேண்டும். அதையே திருவள்ளுவர்,

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்றார்.


கற்கவேண்டிய விடயங்களைச் சரியான முறையில் கற்கும்போது அடுத்தவருக்கு உதவி செய்யவேண்டும் என்ற மனிதாபிமானப் பண்பு தானாகவே வந்துவிடும். அத்தகைய மனித நேயமே பாரதியாரை

"ஒருவருக்கு உணவில்லை எனின் - இந்த
ஜெகத்தினை அளித்திடுவோம்"

எனப் பாடவைத்தது.

அவரைப்போலவே பல அறிஞர்களும் கருத்துக்களை கூறியுள்ளனர்.

தேவையை அறிந்து சேவை செய்யலே கொடை எனப்படலாம். அன்னதானம் கொடை என்பதற்காக ஆலயம் தோறும் அன்னதானத்தினை வழங்கிவந்தால் மனிதன் சோம்பேறி ஆயிடுவான். பின்னர் அன்னதானம் செய்வதற்கே அதற்குரிய பொருளைத் தேட மனிதவளம் இல்லாது போய்விடும். இன்று நம்மிடையே பலவகையான தானங்கள் வழக்கத்தில் இருக்கின்றன. ஆலயங்களுக்கு உபயமளித்தல், குளங்களை அமைத்தல் என்பன அவற்றில் சில. மேலும் கல்விச்சாலைகள், வைத்தியசாலைகள், வீதிகள் அமைத்தல் போன்றனவும், குருதி வழங்குதல், கண்தானம், சிறுநீரகம் வழங்குதல் ஆகியனவும் இன்றைய காலகட்டத்தில் கொடைகளாக இருக்கின்றன.



**சிந்திக்காமல் படித்தால் அந்தப் படிப்பு வீண்!**

**படிக்காமல் சிந்தித்தால் அந்த வாழ்க்கையே வீண்!**

**- கன்பூசியஸ் -**

ஒருவருக்கு அல்லது ஏதோ ஒரு உயிருக்கு எது தேவைப்படுகிறதோ, அது கிடைக்க முடியாததாக இருந்தால், அதை வழங்குவதே கொடை ஆகும். தமது பெயரைப் பெரிதாகப் பொறிப்பதற்காக கட்டடம் கட்டிக்கொடுப்பதும், தாம் ஏனையோரால் போற்றப்படவேண்டும் என்பதற்காக அன்னதானம் கொடுப்பதும் கொடையாகவோ, சரியான தானமாகவோ கருதப்படமாட்டாது. நல்ல கல்வியை அனைவருக்கும் வழங்குமிடத்து, அனைவரும் இன்பமான வாழ்வுக்குத் தேவையான அடிப்படை விடயங்கள் அனைத்தையும் பெற்று வளமாக வாழ்வர் என்பது தெளிவு. அதையே பாரதியார்



"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்க ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்" எனப் பாடியுள்ளார்.

கசடற கல் - கற்றபடி நில் அப்போது உலகம் உய்யும். அதற்கு உயர்ந்த கொடையான கல்வியை வழங்குவதற்கு ஒவ்வொருவராலும் எது முடியுமோ அதனைச் செய்யவேண்டும். கல்விமூலம் வழர்ச்சியடைந்த நல்லதொரு சமுதாயமாக எமது சமுதாயத்தை வளர்த்தெடுத்து பேணிக்காப்போம்.

☆☆☆☆

# கற்றுக்கொள்ள வேண்டியவை

ச. கிரிசா, தரம் - 8

தவறுகளைத் திருத்தக் கற்றுக்கொள்
தன்நம்பிக்கை உள்ளவனாவாய்

கடினமாக உழைக்கக் கற்றுக்கொள்
வெற்றிகள் உன்னைத் தேடி வரும்

உன்னை நீ நேசிக்கக் கற்றுக்கொள்
உலகத்தை வெல்லும் உறுதி பெறுவாய்

மற்றவரை நேசிக்கக் கற்றுக்கொள்
அனைத்து செல்வங்களும் உள்ளவனாவாய்

# பூக்கள்

செல்வி கே.கஸ்மியா, தரம் - 06



வண்ண வண்ணப் பூக்களாம்
வகை வகையான பூக்களாம்
மஞ்சள் சிவப்பு வெள்ளை நிறங்களில்
மலரும் வானவில் வண்ணப் பூக்களாம்

தலையில் எடுத்துச் சூடிடுவோம்
மாலைகள் கட்டி மனம் மகிழ்வோம்
இயற்கை தரும் பூக்களாம்
இரசித்து நாளும் பார்க்கலாம்

இறைவனுக்குச் சாத்திடுவோம் ~ அவர்
இரட்சித் தெம்மைக் காத்திடுவார்
மலர்களையும் நாம் ரசித்தே
மகிழ்ச்சியாக வாழ்ந்திடுவோம்


## உடற்பயிற்சியின் முக்கியத்துவம்


ச. கிரிசா

உடம்பு உரம்பெற்று ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டுமானால் உடற்பயிற்சி மிகவும் அவசியம். உடற்பயிற்சி செய்யும்போது இதயம் வேகமாகத் துடிக்கின்றது. இதனால் உடலின் சகல பாகங்களுக்கும் அதிக இரத்தம் கிடைக்கின்றது. உடற்பயிற்சி செய்யும்போது அதிகமாக சுவாசிக்கின்றோம். இதனால் உடம்பின் எல்லாப் பாகங்களுக்கும் ஒட்சிசன் வாயு ஏராளமாகக் கிடைக்கின்றது. தசைகளுக்குப் பயிற்சி இல்லாவிட்டால் புத்தி மந்தமடையும். ஞாபக சக்தி நன்றாக இருக்கவும், சுறுசுறுப்பாய் படித்து பாடங்களை விரைவில் கற்கவும் விரும்புபவர்கள் தினமும் விளையாட்டு, நடை, நீச்சல் போன்ற உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது அவசியம்.

# MY HOBBY

S. Pirunthajiny, Grade 6





My hobby is collecting stamps. I have a collection of about two thousand stamps. I have stamps of almost all the countries in the world. I have a big album for my stamps. It is a birthday present from my aunty.

I get stamps in various ways. My fathar who is a cashier in a bank very often brings me stamps of other countries. I collect stamps from my friends at school. I have many pen friends in many parts of the world. I send them Sri Lankan stamps and they send me the stamps of their own countries. They saied that Sri Lankan stamps are very beautiful.

Stamp collecting helps to widen my knowledge. It is very beautiful for social studies. By collecting stamps I knew the history of many countries, their capital cities, historic buildings, famous leaders, beautiful sceneries and name of currencies they use. whenever I am free, I pull out my stamp album and spend hours looking at the beautiful stamp collection. It is not only for happy but also for knowledge.

மண்ணில் செய்த சிற்பங்கள்
மறைந்துபோகும்
கல்லில் செதுக்கியவைகூட
காலப்போக்கில் உடைந்துபோகும்
மாணவர் எம் மூளையில் கல்வி
நாம் மடியும்வரை அழியாது வாழும்.




- ச.சரண்யா, தரம் - 06

# வருமுன் காப்போம்

**பா.லஜந்தன், தரம் 4**

நுளம்பை அழித்தல் வேண்டும். டெங்கு உண்டாகாமல் தடுத்தல் வேண்டும். வீட்டுப்புறங்களில் தண்ணீர் தேங்கிநிற்காமல் பாதுகாக்க வேண்டும். பழைய பாத்திரங்கள், சிரட்டைகள் என்பவற்றை அழித்தல் வேண்டும். பூச்சாடிகள் மற்றும் தேவையான பாத்திரங்களில் தண்ணீர் இருந்தால் அகற்றுங்கள் அல்லது உப்பு இடுங்கள். டெங்கிலிருந்து தப்ப எச்சரிக்கையுடன் இருங்கள். அனைவருடனும் நலமுடன் வாழ டெங்கை ஒழிப்போம், டெங்கின் பயம் மறப்போம்.






# டெங்கு

**- ச.கிரிசா**

டெங்கு நோய் எமது சூழலில் பரவிவரும் மிகக்கொடிய நோய். டெங்கினால் எத்தனையோ உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. பலர் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றனர். எங்களையும் எங்கள் குடும்பத்தையும் பாதுகாக்கவேண்டுமானால் முதலில் நாம் எமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவேண்டும். வீட்டில் உள்ள குப்பைகூழங்களை அகற்றி வீட்டை மட்டும் பாதுகாத்தால் போதாது கிராமத்தில் உள்ள குப்பைகளையும் அகற்றவேண்டும். டெங்கைப் பரப்பும் நுளம்பு தேங்கி நிற்கும் நீரில் முட்டை இடுகின்றது. யோக்கட் கப், வாளி, பொலித்தீன், தென்னங்கோம்பை என்பவற்றை சும்மா போட்டுவிடாது, குழி தோண்டிப் புதைத்தல் அல்லது எரித்தல் வேண்டும். சிலர் நோய் வந்த பிறகே இதனைப் புரிந்துகொள்கின்றோம். இன்றே நாங்கள் எமது சூழலைப் பாதுகாக்க முன்வருவோம்.

# தன்னம்பிக்கை

- ஆ.கஜந்தன், தரம் 8

தன்னம்பிக்கைதான் நம் வாழ்க்கையை உயர்த்துகிறது. நம் வாழ்வில் இனிமை சேர்க்கிறது. நம்பிக்கை என்ற ஒரு வார்த்தை - அதுதான் மனித வாழ்க்கை. உலகத்தை இயக்குவதும் இந் நம்பிக்கையே.

முதலில் ஒவ்வொருவரும் தன்னை நம்பவேண்டும். எதையும் சாதிக்க என்னால் முடியும் என்பதே தன்னம்பிக்கை. தன்னம்பிக்கைக்கு உள்ள ஆற்றலை அளவிட முடியாது. தன்னம்பிக்கை இருந்தால் இமயத்தைக்கூடக் கடந்துவிடலாம்.

சிறு வயது முதலே ஓர் இலட்சியத்தை வகுத்துக்கொள்ளவேண்டும். கிடைக்கின்ற வாய்ப்பை அது எவ்வளவு சிறிதாயினும் நழுவவிட்டுவிடக்கூடாது. பொறுமையாக இருக்கிறோம் என எண்ணிக்கொண்டு எதுவும் செய்யாமல் சும்மா இருப்பது வெட்டிப் பொழுது போக்குதலே. செயற்திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயற்படுத்தி, எதையும் புதுமையாகச் செய்ய முயல வேண்டும்.

ஒரு காரியத்தைச் செய்யும்போது அதனுடன் ஒன்றிப்போவது அவசியம். எடுத்த காரியத்தில் முழு ஈடுபாடு இருக்க வேண்டும். அதுவே வெற்றியை ஈட்டுவதற்கான வழி.

வெற்றி என்பது எவ்வளவு உயர்ந்திருக்கிறோம் என்பதல்ல, நாம் விழும்போது எத்தனைமுறை எழுந்து நிற்கிறோம் என்பதே.

---

## மாணவர்களின் ஆக்கங்களும் இச் சஞ்சிகை பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.

இப் "புதிய காலைக்கதிர்" சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக புலம்பெயர், எமது கிராமத்து மாணவர்களிடமிருந்து கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம் போன்ற பல்வேறு விதமான ஆக்கங்களையும் மாணவர் மன்றம் வேண்டிநிற்கின்றது. தங்களால் சுயமாக உருவாக்கப்பட்டதான ஆக்கங்களை தட்டச்சு செய்தோ கையெழுத்துப் பிரதியாகவோ வழங்க முடியும். ஓவியங்களை ஸ்கான் பண்ணி மென்பிரதியாகவும் அனுப்பிவைக்கலாம்.

உங்கள் ஆக்கங்களை அனுப்பவோ ஒப்படைக்கவோ வேண்டிய முகவரி :

மறுமலர்ச்சி மன்றம்,காலையடி, பண்டத்தரிப்பு.

மின்னஞ்சல் முகவரி : saba.thanujan@gmail.com

# கணித பாடத்தின் முக்கியத்துவம்


த. டிலக்சனா, தரம் - 10

கல்வி என்பது கரைகாண முடியாத ஒரு சமுத்திரம். இதில் நாம் இலகுவாக நீச்சல் அடிப்பதற்கு அலைகள் போன்று தடைகளாக பரீட்சைகள் அமைகின்றன. அதில் மிகவும் முக்கியமானதொரு பரீட்சையாக க.பொ.த சாதாரண தரப் பரீட்சை விளங்குகின்றது. இப்பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடைவது கட்டாயம் என்பதால் பலருடைய எதிர்காலக் கல்விக்குக் கணிதபாடம் ஒரு பெரும் தடையாக அமைகின்றது.

இன்றைய மாணவர்கள் நாளைய உலகில் உயர் கல்வியோ, தொழிற் கல்வியோ அல்லது தொழில் வாய்ப்பையோ பெற விரும்பின் கணித பாடத்தில் விசேட சித்தி (C) பல்வேறு சந்தர்ப்பங்களில் அவசியமாகின்றது.

எனவே, மாணவர்களாகிய நாம் கணித பாடத்தை எட்டாக் கனி என எண்ணித் தொலைவில் விரட்டாமல் மிகுந்த அக்கறையுடன் கணித பாடத்தைப் படித்து, சிறந்த சித்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கணிதம் வெறுமனே பரீட்சைக்கு மாத்திரமன்றி எமது வாழ்வின் அன்றாட செயற்பாடுகளைச் சரியாகவும், சிறப்பாகவும் மேற்கொள்ள உதவுகின்றது. பணக் கொடுக்கல் வாங்கல்களில் தவறு ஏற்படாமல் பார்க்க கணிதம் கற்பிக்கின்றது.




## பொது அறிவு - பா தக்சிகன் தரம் 5

☆விண்வெளிக்கு முதலில் சென்ற உயிரினம் ~ லைக்கா என்ற நாய்

☆அதிக முட்டையிடும் உயிரினம் ~ கறையான் 30 000

☆மூக்கில் பல் உள்ள விலங்கு ~ முதளை

☆மூன்று இதயங்களைக் கொண்ட உயிரினம் ~ ஒக்டோபஸ்

☆ராணித் தேனி தன்வாழ்வில் எத்தனை முட்டை இடும் ~ 6 லட்சம்

☆தும்மலின் வேகம் ~ மணிக்கு 100 கிலோமீற்றர்

# பெண்ணினமே!

செல்வி பா பிரியங்கா, க.பொ.த. உயர்தரம்



பெண்ணினமே!
உன்னைச் சுமையாக நினைப்பது
ஆணினமே!
கருவைச் சுமப்பது
பெண்ணினமே!
கண்ணீரை வர வைப்பது
ஆணினமே!
கண்ணிமைபோல் காப்பது
பெண்ணினமே!
கரிக்கட்டையாய் ஆக்குவது
ஆணினமே!

சுகம்தரும் போகப்பொருளாய்
இருப்பவளும் நீதான்!
சீதையாய் வாழ ஆசைப்பட்டு
சிதைக்குள் செல்பவளும் நீதான்!
அன்பெனும் சொல்லுக்கு
அடிமையாகுபவளும் நீதான்!
ஆதனத்துக்காக அடிமையாக்கப்படுபவளும் நீதான்!

கணவனே தெய்வம் என நம்பி
கண்மணிகள் பல பெற்று
கண்ணிமைபோல் காப்பதும் நீதான்!
காலில் மிதிபடுவதும் நீதான்!
தாயாய் மதிக்கப்படுபவளும் நீதான்!
தாரமாய்ப் பிழியப்படுபவளும் நீதான்!
உடன்பிறப்பாய் சுரண்டப்படுபவளும் நீதான்!
கருவிலே கண்டுபிடிக்கப்பட்டு
உருவம் பெறுவதற்கு முன்னர்
அழிக்கப்படுபவளும் நீதான்!





பெண்ணே உன் பெருமை
வையமெல்லாம் போற்றிடவே!
வாழ்க பெண்மை!
வழர்க பெண்ணினம்!











WEL COME
my Art
thank you


my Art
thank you











## காலைச் சிறா











# றாரின் கைவண்ணம்













# விடியலைத் தேடிய பிரிவின் ரணங்கள்

செல்வி சி. விதுர்க்ஷா, க.பொ.த. உயர் தரம்

கணபதிப்பிள்ளை கரியலில் கட்டியிருந்த பலாப்பழத்தை எடுத்து திண்ணையில் வைத்தார். பரிமளம் சமையல் செய்துகொண்டிருந்தாள். கணபதிப்பிள்ளை அந்தப் பலாப்பழத்தை வெட்டிப் பிரித்தார். அதில் ஒரு சுளையை எடுத்து வாயில் வைத்துச் சுவைத்துக்கொண்டே, "ஆஹா, என்ன ருசி! எங்கட வளவுப் பலாப்பழ ருசியை எந்தப் பலாவாலையும் அடிக்க முடியாது" என்றார். அது அவர் சவுதியிலை உழைச்சு வேண்ண வளவு. அதைக் கேட்ட பரிமளம் ஒரு சுளையை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு, "இந்தப் பலாப்பழத்தைச் சாப்பிட குமார் இல்லாமப் போய்விட்டான்" என்றாள். அதைக் கேட்ட கணபதிப்பிள்ளைக்கு குமார் ஒருமுறை தொலைபேசியில் பேசும்போது கூறிய வார்த்தைகள் ஞாபகம் வந்தன.

"எங்கட வளவுப் பலாப்பழம் பழுத்துவிட்டுதோ அப்பா?"

"அதுக்கு நாள் கிடக்கிது. உங்க பலாப்பழம் வோண்டலாமோ?"


"ஓம். ஆனா, வில கூட. நான் இங்கை வந்த புதிசிலை நிறையக் காசு குடுத்து வாங்கிச் சாப்பிட்டனான். அது வெறும் சீனிப் பாணியப்பா. எங்கட வளவு பலாப்பழத்தின்ர ருசி இங்கை எங்கை தேடினாலும் கிடைக்காது."


"உங்க ஒரு பலாப்பழம் எவ்வளவு காசு வருமடா தம்பி?"

"இங்க பலாப்பழம் வாங்கிற காசுக்கு உங்கை ஒரு பரப்புக் காணி வாங்கிப்போடலாம்."

அந்த உரையாடலுக்குப் பிறகு, கணபதிப்பிள்ளை "தன்ர பிள்ளை முந்தினமாதிரி ஊதாரி இல்லை. பணத்தின்ர பெறுமதியை உணரத்தொடங்கிவிட்டான்" என்று நினைத்துச் சந்தோசப்பட்டார்.

ஆனால் இன்று கணபதிப்பிள்ளையின் கண்கள் குளமாகின. குமாரை நினைத்துத் தான் கவலைப்படுவதைக் காட்ட விரும்பாமல். பரிமளத்துக்குத் தெரியாமல் கண்களில் வளிந்த கண்ணீர்த்துழியைத் துடைத்துக்கொண்டே வெளியே வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தார், பெருமூச்சொன்று வெளிப்பட்டோய்ந்தது.





# உங்களின் சிந்தனைக்கு

தொகுப்பு செல்வி தி. கஜேந்தினி. க.பொ.த. உயர் தரம்

- ✓ ஆற்றலில் மிகப்பெரியது மனிதனின் மன உறுதியே - ஸ்டாலின்
- ✓ மாற்றம் வேண்டுமானால், தொழிலாளரிடம் அதிகாரத்தைக் கொடுங்கள். மாற்றத்தை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். - யாரோ
- ✓ எனக்கு உடல் ஆரோக்கியத்தைவிட மன ஆரோக்கியமே முக்கியம் - காந்தி
- ✓ ஏன்? எதற்கு? எவ்வாறு? என்ற சந்தேகங்களே கண்டுபிடிப்பின் தந்தை. - கலிலியோ
- ✓ என் மகத்தான கண்டுபிடிப்புகளுக்குப் பின்னணியில் உள்ள இரகசியம், கேள்வி கேட்கும் வழக்கத்தை விடாமல் இருப்பதுதான். - ஐன்ஸ்டீன்
- ✓ மிகச்சிறந்த மனிதர்கள் பிறப்பதில்லை. தங்களைத் தாங்களே உருவாக்கிக்கொள்கிறார்கள். - சுப்ரமணியம் சந்திரசேகர்
- ✓ புத்தகங்கள் எண்ணங்களை உருவாக்கும். எண்ணங்கள் செயல்களை வழர்க்கும். - அப்துல் கலாம்
- ✓ எந்த மாபெரும் காரியத்தைப் புரிவதற்கும், எழுச்சிகரமான சிந்தனை தேவை - சேகுவேரா
- ✓ அதிகப் பேச்சும் பொய்யும் நெருங்கிய உறவினர். - ஜேர்மன் பழமொழி
- ✓ இலட்சியங்களே உலகின் எஜமான்கள். - ஹோலந்துப் பழமொழி
- ✓ சொர்க்கம் ஒரு பயணியைத் தாமதிக்க வைக்காது. - சீனப் பழமொழி
- ✓ உன் மதிப்பிற்குரியவரல்லாத எவருடனும் நட்புக்கொள்ளாதே - றொபேட் வாறிங் டார்வின்



வரலாறைப் படிப்பதன் நோக்கம் சில தேதிகளையும் சம்பவங்களையும் மனப்பாடம் செய்வதாக இருத்தல் கூடாது. ஒரு மன்னனின் பிறந்த, இறந்த தினங்களையும் பட்டாபிசேக நாளையும் ஞாபகம் வைத்திருப்பதில் என்ன பயன் இருக்க முடியும்? சரித்திரப் பிரசித்தமான சம்பவங்களுக்கான காரணங்களையும் அச்சம்பவங்கள் நிகழக் காரணமான சக்திகளையும் ஆராய்ந்து அறிய முற்படுவதுதான் வரலாற்றைக் கற்பதன் சரியான நோக்கமாக இருக்க முடியும்.

அடோல்வ் கிட்லர்

# தாய்மையின் ஈரம்

என்
விழிகளில் அழுதிட
இதழ்களில் சிரித்திட
இமைகளில் உறங்கிட
இம்சையை இரசித்திட
வேற்றியில் களித்திட
தோல்வியில் துவண்டிட

முத்தத்தில் மகிழ்ந்திட
சித்தத்தை செதுக்கிட
உதிரத்தை துடைத்திட
உயிருடன் கலந்திட
இன்பத்தைப் பெருக்கிட
இன்னலைக் களைந்திட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட
இனிய தேவதை நீ
அம்மா!



உனக்கு நான் பட்டகடனதை
ஏத்தனை பிறவி எடுத்தும்
தீர்க்க முடியாத நிலையில்
ஒன்று மட்டும்
உறுதி செய்கிறேன்
உன்உயிர்த்துளியாகக் கருதி
எனக்கு நீ ஆற்றியவைகளை மறந்திடும் நாளொன்றில்
இந்த மகளுக்கு
இவ்வுலகம் வைத்திடும்
பெயர் பிணம்.........

வி.கார்த்திகா

# நான் கண்ட கனவு

- செல்வன் ஆ. கஜந்தன், தரம் 8.

மாலைப் பொழுதொன்றில் சம்பில்துறைக் கடற்கரையில் எனது நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தேன். அப்போது நீரில் மிதக்கக் கூடிய வடிவான கடல் விமானம் ஒன்று அங்கு வந்திறங்கியது. அதைப் பார்த்து நாங்களெல்லாம் ஆச்சரியத்தில் வாயைப் பிளந்திருந்த நேரத்தில் அதிலிருந்து நத்தார் தாத்தா உடை அணிந்த ஒருவர் இறங்கி எங்களை நோக்கி வந்து, "உங்களுக்கெல்லாம் என்ன வேண்டும்?" என்று கேட்டார். நான் தங்க நகைகள் கேட்க, மற்றவர்கள் சொக்கிளெற், ஐஸ்கிறீம் கேட்டார்கள்.

அவர் எங்களை தனது விமானத்தில் ஏற்றிக்கொண்டுபோய் ஒரு தீவில் இறக்கினார். அங்கே சொக்கிளெற் மாதிரியான கட்டங்கள் காணப்பட்டது. நாங்கள் அங்கு புல், இலைகள், பூக்களைப் பறித்துச் சாப்பிட்டோம். அவையெல்லாம் சொக்ளெட் ஆகவே இருந்தது. அங்க வெறுக்கும் வரை சொக்ளெற்றைச் சாப்பிட்டுவிட்டு வெறு ஒரு இடத்துக்கு நடந்து போனோம். அங்கே ஒரு சொக்ளெற் நீர்வீழ்ச்சியைப் பார்த்தோம்.

பின்னர் ஐஸ்கிறீம் தொழிற்சாலைக்கு வந்தோம். அங்கே யாவும் ஐஸ்கிறீம் போலக் காணப்பட்டது. ஐஸ்கிறீம்கள் ஒவ்வொன்றும் தெய்வ வடிவங்கள், பொம்மைகள் போன்ற வடிவங்களில் செய்யப்பட்டு இருந்தது.



என்னை அங்கு வேலை செய்த ஒருவர் "உமக்கு விருப்பமான கடவுள் யார்? " என்று கேட்டார். நான் "காளி" என்று கூறினேன். அவர் எனக்குக் காளி உருவான ஐஸ்கிறீம் தந்தார். நாங்கள் எல்லோரும் சொக்கிளெற், ஐஸ்கிறீம் காளி என்பவற்றை எடுத்துக்கொண்டு விமானத்தில் ஏறி அந்தத் தீவை விட்டு வெளியேறினோம்.

அந்த விமானம் தங்கம் எடுப்பதற்கு, தங்கம் இருக்கும் இடத்திற்குச் சென்றது. அங்கு தங்க நகைகள் நிறைந்து காணப்பட்டது. நாங்கள் சொக்கிளேற், ஐஸ்கிறீம்களை எறிந்துவிட்டு தங்க நகைகளை எடுத்தோம். நாங்கள் எங்களை அழைத்துவந்த நத்தார் தாத்தாவிடம் எங்களை வீட்டில் விடும்படி கேட்டோம். அவர் எங்களைப் பார்த்து "நீங்கள் எனது அன்புக்குரியவர்கள். என்று வேண்டுமென்றாலும் இங்கே வரலாம்."

எனக்கூறி மந்திரக் கோல் ஒன்றைத் தந்தார். பின்னர் விமானத்தில் ஏற்றி எங்கள் வீடுகளிற்கு மேல் விமானம் பறக்கும்போது பராசூட்டை அணிந்துகொண்டு மேலிருந்து குதிக்குமாறும். அது பாதுகாப்பாக எங்கள் எங்கள் வீட்டு வாசல்களில் எங்களை இறக்கும் என்றும் கூறினார். நாங்கள் பயத்துடனும் பரபரப்புடனும் குதிக்கத் தயாரானோம்.

அப்போது அம்மா என்னை அழைக்கும் சத்தம் கேட்டது. பாடசாலைக்குப் போக வேளைக்கு எழுந்து பல் விளக்குமாறு அம்மா கூற. கனவு கலைந்து நானும் எழுந்தேன்.




# சினிமா என்னும் சிறை

- செல்வி ம. தகானா. க.பொ.த. உயர் தரம்

ஓ சகோதரனே!
படைத்தவர் உன்னை
எதற்காகப் படைத்தார்?
சினிமா மோகத்தில் நீ
சீரழிந்து போவதற்கா?
கரம் நீட்டி வழி நடத்தியவர்
உன்னை எதற்காக அழைத்தார்?
கனிந்த தமது மொழியை
நீயும் பறைசாற்றிடத்தானே!

ஊன் உறக்கம் மறந்து
எத்தனை சினிமா பார்த்தாய்?
படிப்பதற்கும் ஏனைய
பணிகளுக்குமென்றால்
நேரம் போதவில்லை என்கிறாயே!
கடந்த கால வாழ்வின் நினைவில்
எதிர்கால இலட்சியத்தை வெல்ல
சிந்தித்து செயற்படு
சினிமா என்னும் மாயச்
சிறையை உடைத்து - உன்
சிறகினை விரித்திடு



# விடியல் எப்போது?

- செல்வன் தி.தினாத்



வறண்ட நிலங்களும்
இருண்ட இதயங்களும்
மிரண்டுபோன மக்களும்
துவக்கேந்திய கரங்களும்
தொலைந்துபோவது எப்போது?

வீசப்பட்ட வீடுகளும்
பிரண்டுபோன மரங்களும்
பிரிந்துபோன உறவுகளும்
சிதைந்துபோன நம் தேசமும்
சீர்செய்யப்படுவது எப்போது?


குரல் கொடுத்த குயில்களும்
வாசனை தந்த மலர்களும்
ஒளி தந்த சூரியனும்
நிழல் தந்த மரங்களும்
மீண்டும் நிமிர்வது எப்போது?

பார்த்திராத மனிதரும்
பனைமரத்து அரண்களும்
முட்கம்பி முகாம்களும்
முடிந்து போன காலமொன்றில்
நாம் நிமிர்ந்து நிற்பதெப்போது?



புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விடப் பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே. - லெனின்

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு 'புத்தகம்'.
- அல்பேட் ஐன்ஸ்டீன்



# வெறுக்கும் தேடி

- த.டிலக்க்ஷனா, தரம் 10

கண்ணனுடையை குடும்பம் அவர்களது கிராமத்திலேயே அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய, அனைவராலும் மதிக்கப்பட்ட ஒரு குடும்பம். அக்குடும்பத்தில் மூத்த மகனே கண்ணன். அவன் பட்டம் பெற்று ஓர் அதிகாரியாக கண்டி கச்சேரியில் வேலை செய்துகொண்டிருந்தான். தனது கிராமத்திலேயே மதிப்பான குடும்பத்தைச் செர்ந்த மாலாவைத் திருமணம் செய்து, கண்டியிலே ஒரு வாடகை வீட்டில் இருவரும் வாழ்ந்தனர்.



இவனைப் பயன்படுத்திக் கச்சேரிக்குள் தங்களது காரியங்களை இலகுவாகவும், விரைவாகவும் முடிக்க நினைத்த சில பண முதலைகள் கண்ணனைத் தங்களுடைய பாட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு அழைத்தார்கள். மெல்ல மெல்ல வெளிநாட்டு மது வகைகளை அன்பளிப்பாகக் கொடுத்து தங்களுடைய தேவைகளை ஒழுங்கற்ற முறையில் நிறைவேற்றிக்கொண்டனர். ஒரு முறை குடிக்கப் பழகியவன் மீண்டும் மீண்டும் குடித்தான். உடலின் உயிரணுக்கள் கொண்டுவா கொண்டு வா என்று அவனுக்கு உணர்ச்சியூட்டின. அப்பாவியான கண்ணன் தன்னை அறியாமலேயே குடிப் பழக்கத்துக்கு அடிமையாகினான். தவறான வழிகளில் அலுவலக பணத்தைக் கையாளத் தொடங்கினான். குற்றத்தை மறைப்பதற்கு நிலபுலங்களை விற்று பணத்தைத் திரட்டி அடைத்தான். அவனது தந்தைவழி சொத்துக்கள் முழுவதும் கரைந்தன. அருமை மனைவியின் நகை நட்டுக்கள் கூட விலை போனது. இந்நிலையிலும் அவன் மதுவை விடவில்லை. இவனுடைய தில்லுமுல்லுகள் மேலதிகாரிகளுக்குத் தெரியவந்ததாலும், எந்நேரமும் மது போதையிலேயே இருந்தமையாலும் வேலை பறிபோனது. பண வருவாய் இல்லை. உண்ண உடுக்க வழியில்லாதபோதும், குடிக்க வேண்டும். பெற்றோரை மனைவியைப் பற்றி அணுவளவும் கரிசனை இருக்கவில்லை. சாராயக் கடையே தஞ்சம் என்றிருந்தான். கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுபோல் அழகு குன்றி அவலட்சணமாக காட்சியளித்தான்.

எத்தனையோ பேருக்கு ஆடை அணிகலங்கள் தானம் செய்தவன் மேலாடை இன்றி அழுக்குத் துணியை அரையில் கட்டிக்கொண்டு நகரச் சந்தியிலே கிளியல் துணிவிரித்துப் பிச்சை எடுக்கத் தொடங்கிவிட்டான். அவனுக்கு உறவு என்று சொல்ல யாருமில்லை. முன்பு அவனிடம் உதவி பெற்றவர்கள்கூட அவனைக் காணாதவர்கள்போலச் செல்வது வழக்கமாகிவிட்டது. ஐயோ பாவம் மலை உச்சியில் இருந்தவன் பாதாளத்தில் விழுந்துவிட்டான். அவன் அதிலிருந்து மீள யார் கைகொடுப்பார். மரணதேவன் அரவணைக்கும் முன்னர். ☆☆☆



எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப்படுகின்றனவோ, அங்கே விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள்.

\- சேகுவேரா

பழங்காலத்திய மகா புரிசர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாட நான் நூலகம் சென்றேன். - மாவோ






வேறு எந்தச் சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும்.

\- நெல்சன் மண்டேலா

ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?
'ஒரு நூலகம் கட்டுவேன்.' - மகாத்மா காந்தி





உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ, அது போல மூளைக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு. - சிக்மன் ப்ரொய்ட்

உண்மையான வாசகன் வாசிப்பை முடிப்பதே இல்லை.

\- ஒஸ்கார் வைல்ட்



# பேதைகளை அடிமையாக்கும் போதைவஸ்து.

- தி. கஜேந்தினி. க.பொ.த. உயர் தரம்

இன்று உலகில் போதைப் பொருள் பாவனை பெரும் அச்சுறுத்தலாக உருவாகின்றது. இதனால் இளம் சந்ததியினர் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கு வதோடு தமது வாழ்க்கையினை அழித்துக்கொள்ளும் நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். இதனை உணர்ந்த நிலையில் உலக நாடுகள் போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழித்துக்கட்ட முயன்ற போதும் இந்த நடவடிக்கை இது வரை சாத்தியமான பலனைத் தோற்றுவிக்கவில்லை.


இலங்கையிலே எமது கிராமம் போல் பல சிறிய கிராமங்களில் உள்ள இளைஞர் யுவதிகள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி சீரழிந்து செல்கின்றனர்.

பாடசாலை செல்லும் மாணவர்களிடம் பணம் பறிக்கும் நோக்கிற்காகச் சில நபர்கள் அவர்களைப் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாக்குகின்றனர். போதை வஸ்து தொடர்பான விழிப்புணர்வு எமது பிரதேசத்தில் இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறான செயல்களுக்கு இளைஞர்கள் இலகுவில் ஆட்படு கிறார்கள்.

குடும்பத்தில் உள்ள ஆண்கள் அதிகளவு மது அருந்துவதால் அவர்களது குடும்பங்கள் மிகவும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டு, அவர்களது பிள்ளைகளின் கல்வியும் எதிர்காலமும் பாதிப்படைகின்றது.

போதைப்பொருள் கடத்தல் பல அரசியல் அதிகாரத்தில் உள்ள பெரும் புள்ளிகளால் மேற்கொள்ளப் படுவதால், அதை முற்று முழுதாக ஒழித்துக் கட்டவோ, தடுத்து நிறுத்தவோ முடியாத நிலை காணப்படுகின்றது. இது இன்னும் அதிகரிக்கக்கூடிய ஆபத்தே காணப்படுகின்றது.

போதைப பொருள் பாவனைக்கு அடிமையாகியவர்கள் சிறுவர் துஸ்பிரயோகம், பாலியல் பலாத் காரம் மற்றும் பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இவ்வா றான செயல்களின் அதிகரிப்பினால் எமது பிரதேசம் சீரழிந்து வருகின்றது.



எமது அரசாங்கமானது போதைப் பொருள் பாவனையை ஒழிக்கப் போதிய நடவடிக்கை எடுக்காது விட்டாலும், ஆனி மாதம் 24ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரையான ஒரு வார காலத்தை போதைப்பொருள் எதிர்ப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

உயிர் குடிக்கும் போதைப் பொருட்கள் தொடர்பாக இளம் வயதினர் மத்தியில் போதிய அறிவின்மை காணப்படுவதே பலரும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகப் பிரதான காரணமாகின்றது.

வீட்டில் பெற்றோர் தமது பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள் என்று கவனிக்க வேண்டியது அவசியம். மாணவர்களுக்குத் தேவைக்கதிகமாகப் பணம் வழங்குவதைப் பெற்றோர் தவிர்த்துக்கொள்ளும் அதே வேளை பாடசாலைக்கு அருகில் இயங்கும் சிற்றுண்டி, பலசரக்குக் கடைகள், நடைபாதை வியாபாரிகள் தொடர்பாகப் பொலிசாரும் கண்காணிக்க வேண்டும். ஏனெனில் இவ்வாறான இடங்களிலே போதைப்பொருட்கள் விற்கப்படும் நிலை காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் மாணவர்களைப் போதைவஸ்துக்கு அடிமையாக்கும் வகையில் போதை கலந்த இனிப்பு, ஐஸ்கிறீம் வகைகளை பாடசாலைக்கு அருகில் உள்ள விற்பனை நிலையங்கள் வைத்திருந்து விற்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் மாணவர்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது மீதிப் பணத்திற்காக இவ்வாறான இனிப்புக்களை வழங்கி அப்பாவி மாணவர்களை, அவர்கள் அறியாமலேயே போதைக்கு அடிமையானவர்களாக்கி விடுகின்றனர். எமது கிராமத்தில் தாய்மார் வயல்களுக்குப் பகல் வேளைகளில் கூலி வேலைக்காகச் செல்வதால் பிள்ளைகளை முழுதாகக் கண்காணிக்க முடியாமல் போகின்றது. எனவே, பெற்றோரும் சமூகமும் எமது எதிர்கால சந்ததியைப் போதையின் பிடியில் சிக்காமல் பாதுகாப்பதற்கு மிகவும் பொறுப்புடையவர்களாவர்.

எவ்வளவோ கேளிக்கைகளைக் குழந்தைகளைக் கவர ஏற்படுத்தினேன்.... ஆனால் எல்லாவற்றையும் விட அதிக புதையல் புத்தகங்களிலேயே உள்ளன. - வோல்ட் டிஸ்னி





இந்த வாழ்வின் ஆகச் சிறந்த கேளிக்கைக் கொண்டாட்டம் ஓசையின்றி நடக்கின்றது. அதுதான் புத்தக வாசிப்பு.

- எமர்சன்

போதும் என நொந்து புதிய வாழ்வைத் தேடுகிறீர்களா...... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள். - இங்கர்சால்



காலைக் கதிர் நவம்பர் - 1989 இல் இருந்து

# பெண்ணே சொல்வேன் கேளாய்!

- அழ.பகீரதன்

விட்டு விட்டு
விழுகின்ற
சொட்டு நீருக்காய்
குளாயின் கீழ்
சொண்டு நீட்டி
காத்திருக்கும்
குருவி போல
இடைக் கிடை
அன்புகாட்டும்
குடிகாரக் கணவனுடன்
குடித்தனம் பண்ணுகிறாய்

பெத்த அன்னை
தந்தை பார்த்து
சொத்துக் கொடுத்து
தந்த சொந்தம்
எட்டி அடித்தால்
எனன செய்வது
வாழ்தல் கடன்
எங்கும் இப்படித்தான்
ஆறுதல் சொல்லுகிறாய்

இராணுவ வதையாய்
இரணமாய் உடம்பு
ஆயினும் நீயோ
ஆக்கிய அவனே
மணாளன் என
மகிழ்ச்சி கொள்கிறாய்
மூஞ்சை வீங்கிக்
கண்ணீர் சிந்தினும்
கணவன் அவனே
உரிமை உண்டென
எண்ணம் கொள்கிறாய்!

ஏதென்று சொல்வேன்
உன் அறிவீனம்!
அடிமையாய்ப் போவதற்கோ
திருமண உறவு?
இணையாய் வாழ்வதற்கே
ஒப்பந்த மணமே!
உதவியாய் இருப்பதற்கே
உறவென்ற அமைப்பு
உதைப்பதற் கன்று!

அடிக்கின்ற கையை
தடுத்து நிறுத்து!
அன்பின் தத்துவத்தை
எடுத்துக் கூறு!
முடியாது என்றால்
முறித்து விடு
உறவை!

# காலைக் கதிர் நவம்பர் - 1989 இல் இருந்து

## உண்மையில் நீ ஆண்மகனா?

- நாகேந்திரன்

வீரங்கள் பேசுகின்றாய்
வீராப்புக் காட்டுகின்றாய்
பெண்ணை அடிமைகொள்ளும்
பெரியவீரன் நீதானா?
வருமானமுழைக்காத மாந்தரிடம்
உழைக்கின்ற ஆண்மகன்நீ
உருட்டுகிறாய் சீதனத்தை
வெருட்டுகிறாய் பெண்ணினத்தை!
காதல் காதல் என்று
கரைந்துருகிக் கரம்பிடித்து
கரைத்துவிட்டுக் காதலியை
கலைக்கின்றாய் காசுக்காக
வேண்டிவா சீதனத்தை
இல்லாமல் திரும்பாதே!
உத்தியோகம் பார்க்கும் நீ
உழைக்கும் ஒருத்திக்கு
உணவுபோட வலுவில்லையென்றால்
உனக்கே வெட்கமில்லையா?
உண்மையில் நீ ஆண்மகனா?

கறுத்தப் பனையில்
அறுத்து உண்ணும்
வெள்ளைப் பாலமுதை
கள்ளுக் கொட்டிலிலே
உழைக்கும் இரண்டு காசிற்கே
உறிஞ்சுகிறாய் இரண்டு போத்தில்
வீதியில் விசரனைப்போல்
புளுதியில் புரளுகின்றாய்
ஆணிவேர் ஒன்றினால்
ஆடுகின்றாய் நடனங்கள்
வீதியில் விழுந்தடித்து
வீட்டிற்கு வந்துசேர்ந்தால்
வாய்க்கு ருசியாக
இறைச்சி முட்டை ஏனில்லை?
என்றுதைப்பாய் மனையாளை
உருளுவாள் அவள் தரையில்
வாய்திறந்து அவளெதுவும்
வாய்மையை உரைத்தாலோ
விடுவேனா உன்னையென்று
விலங்குபோல் தாக்கிடுவாய்
போதாது அதுவென்று
போட்டிடுவாய் குத்துச் சண்டை
பானை சட்டியெல்லாம்
பறக்குமுந்தன் கறாட்டியாலே
தெருநாய்போல் குரைத்துக்கொண்டு
வீதியிலே சென்றிடுவாய்
வீழுந்த இடத்தில் படுத்திடுவாய்
வீட்டிலுள்ள பெண்ணிடத்தில்
வீரத்தைக் காட்டுகிறாய்
பாளையறுத்த பாலிற்குப்
பாழாகிப் போகின்றாய்
உண்மையில் நீ ஆண்மகனா?
உரமில்லாக் கோளையன்றோ!




ஒவ்வொரு படமும் நடிக்க ஒத்துக்கொள்ளும்போது வருகின்ற முற்பணத்தில் முதல் நூறு டொலருக்கும் புத்தகம் வாங்குவாராம் சார்ளி சப்ளின்.



எங்கே தங்க விரும்புகிறீர்கள் என்று லண்டன் தோழர்கள் கேட்டபோது, எந்த இடம் நூலகத்துக்கு அருகில் இருக்கிறதோ அங்கே என்றாராம் அம்பேத்கர்.



ஒரு நூலகம் திறக்கப்படும் பிரதேசத்தில் ஒரு சிறைச்சாலை மூடப்படும். - விவேகானந்தர்



நல்ல புத்தகங்களை வாசிக்காத ஒருத்தன் வாசிக்கவே தெரியாதவனைவிட உயர்ந்தவன் அல்ல. - மார்க் ட்வெய்ன்



பெண்களிடமிருந்து கரண்டியைப் பிடுங்கிவிட்டு புத்தகத்தைக் கொடுத்தால் போதும். - பெரியார்



# நன்றி

எமது இப் புதிய காலைக்கதிர் இதழின் மூன்றாம் வெளியீட்டினை வெளியிடுவதற்கு நாம் நிதி உதவியினை கோரி நின்றபோது, இதனை வெளியிடுவதற்கு ரூபா 17 000 ஐ கனடா பண் கலை பண்பாட்டுக் கழகத்தினர், கடந்த 30.11.2013 அன்று அவர்களால் நடாத்தப்பட்ட, சமுதாயக் கவிஞர் அழ. பகீரதனின், மறுமலர்ச்சி மன்றத்தின் மூத்த உறுப்பினர் அமரர் நவரட்ணம் இளங்கண்ணன் அவர்களுக்குச் சமர்ப்பணமாக வெளியிடப்பட்ட 'எப்படியெனிலும்....' என்னும் கவிதைத் தொகுதி அறிமுக நிகழ்வில் சேர்ந்த நிதியிலிருந்து வழங்கி, இவ் இதழ் மிகவும் சிறப்பாக வண்ணமயமாக வெளிவரப் பேருதவி புரிந்துள்ளனர்.

கனடா பண் கலை பண்பாட்டுக் கழகத்தினர்க்கும், அமரர் நவரட்ணம் இளங்கண்ணனின் குடும்பத்தினர்க்கும், இதற்காக நிதியுதவி வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

எமது கிராமத்தவர்களிடையே புத்தகப் பண்பாட்டை வளர்க்குமுகமாகப் புலம் பெயர் தேசங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புத்தக வெளியீடுகளிற்காகவும், எமது ஊரின் இரண்டு எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டுச் சிறப்பித்திருக்கும் கனடா பண் கலை பண்பாட்டுக் கழகத்திற்கு வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதோடு, அதற்காகப் பாடுபடும் அதன் நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

PAN CULTURAL CENTRE OF CANADA

**Pan Cultural Centre Of Canada**

**பண் கலை பண்பாட்டுக் கழகம் கனடா**



